ஒன்றியத்தில் 8100 லிட்டர் பால் உற்பத்தி ஆகிறது. அவர்கள் குறிப்பிடுகின்ற வாலாஜாபாத் பகுதியில் 810 லிட்டர் தான் உற்பத்தியாகிறது. அதனால் அங்கு புதிதாகக் குளிரூட்டும் நிலையம் துவக்க இயலாது.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அவர் கூறுகின்ற அந்தக் கோரிக்கையை நான் ஏற்றுக்கொண்டு, பகுதியிலே இருக்கின்ற விவசாயப் பெருமக்களிடத்திலிருந்து நிறைய பாலை நம்முடைய சங்கத்திலே ஊற்றுவதற்கு ஏற்பாடுகளைச் செய்து உற்பத்தியை அதிகம் பெருக்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளுவேன். அதைச் செய்தால் நம்முடைய அமைச்சரவர்கள் அந்தப் பகுதியிலே குளிரூட்டும் நிலையத்தை அமைப்பதற்கு ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: உற்பத்தி அதிகரிக்குமானால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 36, திரு. வீ. சுப்பிரமணியன், இருக்கையில் இல்லை. திரு. ஆர். பி. பரமசிவம், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.

36—

விக்கிரவாண்டி பேரூராட்சிக்கு அருகில் சிப்காட் மூலம் தொழிற்பேட்டை அமைத்தல்

* **37496**—திரு. வீ. சுப்பிரமணியன்:

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம், விக்ரவாண்டி பேரூராட்சிக்கு அருகில் சிப்காட் மூலம் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ): விழுப்புரம் பகுதியில் தமிழ்நாடு தொழில் அடிப்படை வசதிகள் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் சுமார் ஆயிரம் ஏக்கர் பரப்பில் ஒரு புதிய தொழில் வளர்ச்சி வளாகம் ஒன்றை அமைக்கும் திட்டம் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. அந்தத் தொழில் வளாகத்திற்கான இடத்தைத் தெரிவு செய்யும் ஆய்வுப் பணிகள் தற்சமயம் வேகமாக நடந்து வருகின்றன.

திரு. ஆர். பி. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. அதுபோன்று இப்பொழுது மாவட்டந்தோறும் தொழில்பேட்டை இல்லாத மாவட்டத்தை மாவட்டம் என்றே சொல்வதற்கு அருகதை இல்லை என்று கூறுகின்ற நிலை இருக்கிறது. 30-9-93 அன்று இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் எங்களுடைய மாவட்டத்தைப் புதிய மாவட்டமாக விழுப்புரம் இராமசாமி படையாச்சியார் மாவட்டம் என்று துவக்கி வைத்தார்கள். எங்களுடைய மாவட்டம் முழுவதுமே விவசாயிகள் நிறைந்த மாவட்டம். ஆகவே, இந்த ஆண்டே விழுப்புரத்திற்கு அருகாமையில் உள்ள தேர்வு செய்யும் இடத்தில் தொழில்பேட்டை துவங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: பேரவைத் தலைவரவர்களே, தென்னார்க்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து திரு. இராமசாமி படையாச்சியார் பெயரில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஒரு மாவட்டத்தை உருவாக்கினார்கள். அந்த மாவட்டத்திலே தொழில் வளம் இல்லாத காரணத்தினால் அந்த மாவட்டத்திற்கு என்று தனியாக ஒரு தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென்ற மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய எண்ணக் கனவுகளை நனவாக்குகின்ற வகையிலேதான் இந்தப் பகுதியிலே ஓர் ஆயிரம் ஏக்கர் நிலப் பரப்பில் ஒரு தொழிற்பேட்டையை உருவாக்குவதற்குத் தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வெகுவிரைவில், அதற்குண்டான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 37. திரு. எம். பூராசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

37—

தமிழ்நாடு ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் மாணவர்கள் சேர்க்கை

***13826—**திரு. எம். பூராசாமி:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஆசிரியர் பயிற்சி பள்ளியில் சேர மிகவும் பிற்பட்ட, பிற்பட்ட மற்றும் ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்த மாணவர்களுக்கு 5 மதிப்பெண்கள் குறைவாக பெற்றிருப்பினும் அவர்களை அந்நிறுவனங்களில் அனுமதிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?